தீர்மான நகல்

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கருப்படிதட்டடை ஊராட்சியில் 07-02-2024 தேதியன்று புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஊராட்சி மன்ற தலைவர் திரு. S.வெங்கடேசன் அவர்களின் தலைமையில் ஊராட்சி மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு :-

பொருள் எண் : 46

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கருப்படிதட்டடை ஊராட்சி மற்றும் ஏரிவாக்கம் கிராமம் பழைய சர்வே எண்கள்.44/1A 1B, 46/1, 46/2, புதிய சர்வே எண்கள் : 269/4, 271/1C2, 271/2A1-ல் மொத்த பரப்பளவு 1.79 ஏக்கர் (அ) 7264 ச.மீ இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கு குடியிருப்பு வீட்டுமனைபிரிவு (Layout) வரை படத்திற்கு ம.வ./ந.ஊ.து.இ.(செ.ம) எண்.17/2024 என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளித்து விஜய் நகர் என பெயர் வைக்கப்பட்ட மேற்படி மனைப்பிரிவினை அரசு அங்கீகாரம் பெறுவதற்கு குடியிருப்பு மனைப்பிரிவிற்கான இணையதள விண்ணப்ப எண்.MBQZQIC9 - நாள் : 07-12-2023ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து ஊராட்சிக்கு பொது உபயோகத்திற்கு தானம் அளிக்கப்பட்ட தான பத்திரம் எண்.231/2024 சாலைகள் பூங்கா மற்றும் மூலை முடுக்குகள் ஊராட்சியின் பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்டு தான பத்திரம் எண்.231/2024 நாள் : 23-01-2024ன் படி பெறப்பட்டதன் அடிப்படையிலும், தொழில் நுட்ப ஒப்புதல் கட்டணம் உரிய அரசு தலைப்பிலும் மற்றும் கிராம வளர்ச்சி கட்டணம் பெறப்பட்டுள்ளதாலும், வீட்டு மனைப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மனைகள் எண்ணிக்கை ஐம்பத்தி ஐந்து 55 விற்பனை செய்ய ஊராட்சி மன்றம் இறுதி ஒப்புதல் வழங்க கோருதல்.

தீர்மான எண் : 46

கருப்படிதட்டடை ஊராட்சி மற்றும் ஏரிவாக்கம் கிராமம் பழைய சர்வே எண்கள். 44/1A 1B, 46/1, 46/2, புதிய சர்வே எண்கள் : 269/4, 271/1C2, 271/2A1-ல் மொத்த பரப்பளவு 1.79 ஏக்கர் (அ) 7264 ச.மீ இடத்தில் அமைந்துள்ள விஜய் நகர் வீட்டு மனைபிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மனைகள் எண்ணிக்கை ஐம்பத்தி ஐந்து 55 விற்பனை செய்ய ஊராட்சி மன்றம் ஒப்புதல் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

S. Venkatesan

தலைவர்

கருப்படித்தட்டடை ஊராட்சி

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்

ஊராட்சி மன்றத்தலைவர்

கருப்படிதட்டடை ஊராட்சி

ஊராட்சி மன்றத்தலைவர், கருப்படிதட்டடை ஊராட்சி
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு. S.வெங்கடேசன்

நக.எண். 002/2024 நாள் - 07-02-2024

பொருள் மனைபிரிவு - காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் - கருப்படிதட்டடை ஊராட்சி ஏரிவாக்கம் கிராமம் - பழைய சர்வே எண்கள்.44/1A 1B, 46/1, 46/2 இதற்கு பட்டா எண்.1155, 1159-ன் படி புதிய சர்வே எண்.269/4, 271/1C2, 271/2A1ல் மொத்த பரப்பளவு 1.79 சென்ட் (அ) 7264 ச.மீ அமைந்துள்ள குடியிருப்பு வீட்டுமனை (Layout) வரைபடத்திற்கு SWP/DTCP/ KANCHIPURAM-LPA/LAYOUT NO.17/2024 என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளித்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து வீட்டு மனைகள் விற்பனை செய்ய கருப்படிதட்டடை கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடுதல்

பார்வை
1) மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடித எண். ந.க.எண். MBQZQIC9/2024/TCP நாள் : 01-02-2024
2) கருப்படிதட்டடை ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.46 நாள் : 07-02-2024
3) மனுதாரர்-1 திரு. எஸ்.கதிரவன்-1, 24/28, கணபதி நகர், 2-வது தெரு, ஈக்காட்டுதாங்கல், சென்னை
4) மனுதாரர்-2 திரு. ஆர்.யதுநந்தன்-2, 70/80, லிங்கப்பன் தெரு, காஞ்சிபுரம் என்பவரது விண்ணப்பம்,

.....

உத்தரவு :-

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் - கருப்படிதட்டடை ஊராட்சி ஏரிவாக்கம் கிராமம் - பழைய சர்வே எண்கள்.44/1A 1B, 46/1, 46/2 இதற்கு பட்டா எண்.1155, 1159-ன் படி புதிய சர்வே எண்.269/4, 271/1C2, 271/2A1ல் மொத்த பரப்பளவு 1.79 சென்ட் (அ) 7264 ச.மீ அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கான சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு அமைப்பு வரைபடம் 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தின் வாயிலாக பெறப்பட்ட சாலை அமைப்பு Blue Print-ல் வரைபடத்தில் தெரிவித்துள்ளபடி, பூங்கா, சாலைகள், பொது உபயோகம், மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின் பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் கருப்படிதட்டடை கிராம ஊராட்சியின் பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்டு தான பத்திரம் எண்.231/2024 நாள் : 23-01-2024-ன் படி பெறப்பட்டுள்ளது.

மேற்படி அதனை தொடர்ந்து பார்வை 1ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தில் தொழில் நுட்ப ஒப்புதல் (Technical Santion) வழங்கப்பட்ட இம்மனைபிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/ KANCHIPURAM-LPA/LAYOUT NO.17/2024 என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளிக்கட்டுள்ளதாலும் கிராம ஊராட்சி வளர்ச்சி கட்டணம் ஊராட்சி மன்றத்தால் பெறப்பட்டுள்ளதாலும். மேற்படி வீட்டு மனைப்பிரிவில் (LAYOUT) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 55 வீட்டு மனைகளை விற்பனை செய்திட கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கருப்படிதட்டடை கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்பட்டுகிறது.

நிபந்தனைகள்

- நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், போது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதல் அன்றி செய்தல் கூடாது.
- இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்புத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
- மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்தவொரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு உந்த விதத்திலும் பிரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.
- நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என கண்டறியப்பட்டால் (அ) மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ரத்து செய்யப்படும்.
- சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், மனுதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய கிராம ஊராட்சி பொருத்தமான அமைப்பு அல்ல.
- நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், போது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
- நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.24017/2018/ எல்.ஏ.1 நாள். 18.06.2019 ன் படி செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது மனுதார் பின்பற்றவேண்டும்.
- ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட திறந்த வெளி ஒதுக்கீட்டு இடம் (OSR) மனைப்பிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தால் அவர்கள்மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்.
- 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.
- மனைப்பிரிவில் ஒதுக்கப்பட கடை மனைகள் (Shop) அதற்குரிய வணிக உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
- தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6 அடி X 4 அடி அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.
- மனைபிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் பழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட்ட வேண்டும்.

பெறுநர்

1) திரு. எஸ்.கதிரவன், 24/28,
கணபதி நகர், 2-வது தெரு,
சக்காட்டுதாங்கல், சென்னை

2) திரு. ஆர்.பதுரநத்தன், 70/80,
விங்கப்பன் தெரு, காஞ்சிபுரம்

S. Kavi

ஊராட்சி மன்றத்தலைவர்,
கருப்படிதட்டடை ஊராட்சி
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்

நகல்- நகர் ஊரமைப்பு இயக்குநர், காஞ்சிபுரம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் -இணை சார் பதிவாளர் I காஞ்சிபுரம் அவர்களுக்கு மனைகள் பத்திர பதிவு செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது.